## இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு – 2015

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 34 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமம் 37

ஆணைக்குழுவிலிருந்து வழங்கப்பட்ட அறவீடுகளுக்கு எதிராக வெளித்தரப்பினரால் தொடரப்பட்ட வழக்கொன்றிற்காக மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவினால் ரூபா 300,000 வழக்குக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2016 மார்ச் மாதம் 17 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாதிருந்த இந்த வழக்கு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 371(2)(இ) | உப கட்டுநிதி வழங்கப்பட்ட செயற்பாடு நிறைபெற்றதும் உடன்படிக்கைத் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டில் தெற்காசிய உட்கட்டமைப்பு வசதிகளை ஒழுங்குபடுத்தும் பிரிவின் நிகழ்ச்சித் திட்டத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 55,000 முற்பணத்தொகை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2013 செப்தெம்பர் 11 ஆந் திகதிய 02/2013 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் சனவரி முதல் மார்ச் வரை ஊழியர்களினால் செலுத்த வேண்டிய உழைக்கும் போதே செலுத்தும் வரி ரூபா 333,865 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்குப் பதிலாக ஆணைக்குழுவினால் செலுத்தப்பட்டிருந்தது. |

### 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

அனுமதிப்பத்திர உடமையாளர்களுக்கு வழங்கப்பட்ட மின் உற்பத்தி அனுமதிப்பத்திர நிபந்தனை இலக்கம் 11 இன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்காகவும் மீளாய்வாண்டிற்காகவும் மின்சார சபையிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 81,852,700 கூட்டுத்தொகையான வருடாந்த ஒழுங்குபடுத்தல் வரித்தொகையையும் 2011 மற்றும் 2015 வரை ஏனைய நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 460,676 கூட்டு தொகையான வரித் தொகையையும் 2016 மார்ச் 02 ஆந் திகதி வரையிலும் ஆணைக்குழுவினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 4,048,768 மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 24,670,710 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 20,621,942 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மதியுரைச் சேவைக் கட்டணங்கள் ரூபா 24,667,453 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 வருடங்களினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 55,978,423 தொகையான மிகை, பின்னைய 04 வருடங்களின் போதும் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது ரூபா 4,048,768 வரை குறைவடைந்திருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது 2011 முதல் 2015 வரை பங்களிப்பு தளம்பல் நிலையில் இருந்ததுடன் 2013 உடன் ஒப்பிடும் போது 2014 இன் பங்களிப்பு 36 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2015 இல் அது மீண்டும் 13 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் (14) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் ஆணைக்குழுவின் நோக்கங்கள் பின்வருமாறு இருந்தது.

- ❖ சகல நுகர்வோர்களினதும் உரிமையைப் பாதுகாத்தலும் போட்டித் தன்மையை மேம்படுத்தலும்.
- ❖ மின்சக்தி, நீர்ச் சேவை மற்றும் கனிய எண்ணெய் போன்ற பொதுப் பயன்பாட்டுக் கைத்தொழில்களின் செயற்படு நிலை மற்றும் மூலதன முதலீடு என்ற இரண்டினதும் செயற்திறனை மேம்படுத்துதல், அவற்றின் பாதுகாப்பு நிலை மற்றும் சேவைகளின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் அவற்றிற்கு வளங்களை செயற்திறனாக ஒதுக்கீடு செய்வதை மேம்படுத்துதல்.
- ❖ இயலுமான சந்தர்ப்பங்களின் போது சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக பயன்பாட்டுச் சேவை ‘‘பென்ச்மார்க்’’ செய்தல் மற்றும் செயற்திறனாக அமுல்ப்படுத்துகின்ற விலை கட்டுப்பாடு நிறுவனங்களுக்கு அவர்களின் பொதுப் பயன்பாட்டு கைத்தொழில்களுக்காக நிதி வழங்கும் போது முறைகேடான கஷ்டங்களுக்கு முகங்கொடுக்காத வகையில் கண்காணித்தல்

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மேற்கூறப்பட்ட அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பயன்பாட்டுக் கைத்தொழிலாக காண்பிக்கப்பட்ட மின்சாரம், நீர் மற்றும் கனிய எண்ணெய் போன்ற கைத்தொழில்களுக்குரிய ஒழுங்குபடுத்துதல் நடவடிக்கைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், கனிய எண்ணெய் மற்றும் நீருடன் தொடர்புடைய கைத்தொழில்களுக்கு ஆணைக்குழுவின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான சட்டரீதியான நிதிஏற்பாடுகள் உரிய நிறுவனத்தின் மூலம் இது வரையிலும் அக் கைத்தொழில்களை ஆரம்பிக்கும் அதிகாரச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் ஆணைக்குழுவின் சேவை மின்சக்தி கைத்தொழிலுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்ததுடன் நீர் மற்றும் கனிய

எண்ணெய் கைத்தொழில்களுக்கு உரிய சேவையினை வழங்கும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அது தடையாக இருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 07 செயற்பாடுகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் பூர்த்தி செய்யப்படாத வேலையாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 900,382 தொகையான 3 செயற்திட்டங்களுக்குரிய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து செயலாற்றல் காப்புறுதியொன்று பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் ஒரு செயற்திட்டம் தொடர்பாக ஆணைக்குழுவிற்கும் ஒப்பந்தக்காரருக்குமிடையே உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2(ஊ) மற்றும் (ஈ) பந்திகளின் பிரகாரம் புதிய பதவியணியினரின் நிறுவனக் கட்டமைப்பு பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு அங்கீகாரம் பெறவேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறப்பட்ட (அ) இல் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் தொடர்பாக சரியான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 ஒக்தோபர் 17, 2012 ஆகஸ்ட் 09 மற்றும் 2014 ஆகஸ்ட் 20 ஆகிய திகதிகளில் நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் கட்டளையின் பிரகாரம் ஊழியர்களைச் சேர்த்தல் மற்றும் பதவியணியினருக்கான சம்பளத்தைத் தீர்மானிக்கும் போது 2009 மே 26 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 39 ஆம் இலக்கத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், இது வரையிலும் அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது அதில் பாதீடு, கொள்வனவுத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணத்தின் 134(2) ஆம் பிரிவின் பிரகாரம் நிதி நடவடிக்கைகளுக்குரிய உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 134(3) ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டில் 08 விடயங்களின் செலவினங்களுக்காக 25 சதவீதம் முதல் 59 சதவீதம் வரை மிகை நிதிஏற்பாடு காணப்பட்டமையால் பாதீடு நிதிக் கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. ஊழியர்களை ஆட்சேர்த்தல் மற்றும் பதவியுயர்வு நடைமுறைகள் காணப்படாமை மற்றும் சம்பளத் திருத்தங்களுக்காக உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரம் பெறப்படாமை தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.